8th March 1968]

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் எதுவும் வந்து சேரவில்லை. நான்கூட இரண்டு மூன்று முறைகள் மதுரைக்குப் போயிருந்தேன். யாரும் என்னிடம் வந்து விண்ணப்பம் தரவில்லை. ஆனால் இந்தப் பாலம் அமைக்கத் தோராயமாக ரூ. 6 லட்சம் செலவாகும். இதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படவில்லை. சர்க்காரின் நிதி பற்றுக்குறையின் காரணமாக இத்தகைய பாலங்கள் கட்டுவது குறித்து உடனடியாக ஆலோசிக்கவேண்டிய நிலையில் அரசாங்கம் இல்லை.

*Electoral Rolls*

* 221 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Wiil the Hon. the Chief Minister be placed to state—

(*a*) wheth r new electoral rolls have been prepared for the South Madras L k Sabha constituency and Sankari Assembly constituency of Salem district ;

(*b*) if so, the member of voters in the old and new eiectotal rol's respectively; and

(*c*) whether there has been an increase in the number of voters and, if so, the reasons therefor ?

**வாக்காளர் ஜாபிதா**

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் சென்னை மக்கள் சபை தொகுதியிலும் சேலம் சங்கரி சட்டசபைத் தொகுதியிலும் வாக்காளர் ஜாபிதா புதியதாகத் தயாரிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில் பழைய ஜாபிதாவிலும், புதிய ஜாபிதாவிலும் உள்ள வாக்காளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(உ) வாக்காளர்கள் எண்ணிக்கை அதிகப்பட்டிருந்தால், அதற்கான காரணமென்ன?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :**

(அ) தென் சென்னை மக்கள் சபைத் தொகுதியிலுள்ள ஆறு சட்டசபைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் புதிதாகத் தயாரிக்கப்பட்டது. சங்கரி சட்டசபைத் தொகுதியின் வாக்காளர் பட்டியல் சுருக்க வகையில் அதாவது 1966-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்குத் திருத்தம் செய்யப்பட்டது.

(இ) தென் சென்னை மக்கள் சபைத் தொகுதியில் அடங்கிய ஆறு சட்டசபைத் தொகுதிகளின் பழைய வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் எண்ணிக்கை 5,75,015. மேற்படி தொகுதிகளின் புதிய பட்டியல்களில் வாக்காளர் எண்ணிக்கை 5,83,718. அதிகமான வாக்காளர் எண்ணிக்கை 8,703.

சங்கரி சட்டசபைத் தொகுதியின் பழைய வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் எண்ணிக்கை 94,558. சுருக்க வகையில் திருத்தப்பட்ட 1967-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் வாக்காளர் எண்ணிக்கை 94,177. வாக்காளர் எண்ணிக்கையில் குறைவு 381.

(உ) தென் சென்னை மக்கள் சபையில் அடங்கிய ஆறு சட்டசபைத் தொகுதிகளின் பழைய வாக்காளர் பட்டியலில் 1-1-1966-ம் ஆண்டு 21 வயது நிரம்பியவர்கள் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டனர். புதிய வாக்காளர் பட்டியலில் 1-1-1967-ம் ஆண்டு 21 வயது நிரம்பியவர்கள்

எல்லோரும் வாக்காளராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மேலும் முக்கியமாக குடிசைப் பகுதிகளில் மக்கள் குடியேற்றமிருந்ததினால் வாக்காளர் எண்ணிக்கைக் கூடுதலாகியிருக்கிறது.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவரவர்களே, இடைத் தேர்தலுக்கு ஒரு வருடத்திற்கு முன்புதான் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கிறபோது புதிதாக ஜாபிதா தயாரிக்கக்காரணமென்ன? அதற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது ? அந்தச் செலவை யார் ஒப்புக்கொண்டார்கள் ? தேர்தல் கமிஷன் ஒப்புக்கொண்டிருக்கிறதா ? இந்த ஜாபிதாவில் வட சென்னையிலே இருந்தவர்கள் பலர் தென் சென்னையிலே சேர்க்கப்பட்டார்கள் என்றும், பலர் ஜாபிதாவிலிருந்தே நீக்கப்பட்டார்கள் என்றும், புகார் இருக்கிறது. அரசாங்கம் அதற்கு என்ன பதில் சொல்லுகிறது ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நண்பர் சொன்னது அவ்வளவும் புகார்கள்தான்.

**திரு. எம். எத்திராஜிலு :** நகரசபைத் தேர்தலுக்கு முன்பு வட சென்னை வாக்காளர் ஜாபிதாவை திருத்தியமைக்க அரசாங்கத்தில் ஏதாவது யோசனையிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** நகரசபைத் தேர்தலுக்கு முன்னாலே என்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

*Secondary Grade Teachers*

*** 222 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether Secondary Grade T achers who migrated from Panchayat Union Elementary Schools to Aided High Schools in this State before 1st June 1966 are eligible for the benefit of G.O. Ms. No. 365, Education, dated 15th March 1967; and

(*b*) if not, the reasons therefor ?

**இடைநிலை ஆசிரியர்கள்**

**திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், பஞ்சாயத்து ஒன்றிப்பு தொடக்கப் பள்ளிகளினின்று மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 1-6-66-க்கு முன் மாற்றப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் 15-3-1967 தேதியிட்ட தமிழ்நாடு அரசாங்கம் கல்வித்துறை 365-ம் எண் ஆணையின் பலனை அடையத்தகுதியுள்ளவர்களா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Tamil Pandits (Grades I and II)*

***223 *Q.*—THIRU P. ETHIRAJ :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the total number of Grade I and Grade II Tamil Pandits mployed as Tamil Teachers in the High Schools run by the Government and the private sector ;